2003 மார்ச் 25]

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் துணைத் தலைவர் முருங்கைக் காய் மேல் ரொம்ப விருப்பமாக இருக்கிறார். (சிரிப்பு) சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காயில் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முருங்கைக் காயை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படுமா என்று கேட்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு முன்வருவார்களானால் அதை ஏற்றுமதி செய்வதிலே எந்தவிதமான தடங்கலும் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சக்ரபாணி.

திரு. ஆர். சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருங்கைக் காய் உற்பத்தியைப் பொறுத்தவரையில் ஒட்டன்சத்திரம், அரவக்குறிச்சி, வெள்ளக்கோயில் ஆகிய 3 தொகுதிகளிலும் விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்றார்கள். சில நேரங்களில் விவசாயிகளுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அந்த விலை கிடைக்காத நேரத்திலே சேமித்து வைத்து விவசாயிகளுக்கு நல்ல கட்டுப்படியான விலை கிடைக்கின்ற வகையிலே அரசின் சார்பாக இந்த மூன்று தொகுதிகளையும் உள்ளடக்கிய ஒட்டன்சத்திரத்திலே—அங்கே தமிழ்நாட்டிலேயே பெரிய காய்கறி மார்க்கெட் இருக்கிறது—அரசின் சார்பாக குளிர்ச்சாதனக் கிடங்கு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

72—

குழந்தை நலக் காப்பகம்

***18646—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2003 மார்ச் 25

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குழந்தைகள் நலக் காப்பகங்கள் கிராமந்தோறும் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உலகத்திலேயே முதன்முதலாகத் தமிழகத்தில் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்து அன்னை தெரசா அவர்களுடைய நற்பாராட்டுதலைப் பெற்றார்கள். எனவே, இதனை மறுபரிசீலனை செய்து தமிழகத்தில் ஏழை கூலித் தொழிலாளர்களுடைய குழந்தைகள் நலன் காக்கும் விதத்திலே ஒன்றியந்தோறும் குழந்தைகள் நலக் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா என பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகங்கள் தமிழகத்தில் இரண்டு வகையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒன்று, வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளையும், நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளையும் பகல் நேரத்தில் கவனித்துக் கொள்ளக்கூடிய குழந்தைகள் காப்பகங்கள். இரண்டாவது அரசு குழந்தைகள் காப்பகங்கள், சமூக நலத் துறையால் கரூர், திருவள்ளூர், திருவாரூர், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்கள் தவிர 25 மாவட்டங்களில் காப்பகங்கள் செயல்படுகின்றன. இந்தக் காப்பகங்கள் என்பது பெற்றோரோ அல்லது உறவினரோ இல்லாத ஆதாவற்ற கைவிடப்பட்ட குழந்தைகள், தாய் அல்லது தந்தை யாராவது ஒருவர் இறந்துவிட்ட நிலையில் அந்தக் குழந்தைகள், தொழுநோய், மனநோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்களின் குழந்தைகள், நீண்டநாள் சிறைச்சாலையிலே கைதியாக இருக்கிறவர்களின் குழந்தைகள்; இது தவிர தமிழகத்திலே 30,638 மையங்கள் அங்கன்வாடி மையங்கள் உட்பட குழந்தைகளை கிராமங்கள்தோறும் கவனித்துக்கொள்வதற்கு காப்பகங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, கிராமங்கள்தோறும் காப்பகங்கள் அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை, திருவண்ணாமலை மாவட்டத்தில் தொண்டு நிறுவனங்கள், அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலமாக அந்தத் தொகுதியிலே நிறுவுவதற்கு அரசு கவனத்தோடு அதை ஏற்று, இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2003 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 73, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

73—

கட்டட வசதி

***15139—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கழுகுமலை அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிக்குப் புதியதாக அரசுக் கட்டடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-50

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியின் மீது மிகுந்த பற்றும், பாசமும் கொண்டு, தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர்களின் நலன் காத்திட வேண்டுமென்ற எண்ணத்தைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டு காலத்திற்குள், எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு பசுவந்தனை, புளியம்பட்டி, கயத்தாறு, சில்லாங்குளம் ஆகிய 4 இடங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதற்காகத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல இந்த ஆண்டும் கழுகுமலை மாணவர் இல்லம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற உத்தரவாதத்தினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் பசுவன்தனை, கைலாசபுரம், சில்லாங்குளம் ஆகிய இடங்களில் மாணவர் இல்லம் கட்டுவதற்கு அரசு நிதி எப்போது ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.